**Signature and Name of Invigilator**

1. (Signature) ______________________

   (Name) ______________________

2. (Signature) ______________________

   (Name) ______________________

**Answer Sheet No. :** ..............................................

(To be filled by the Candidate)

**Roll No.** | | | | | | | | |

(In figures as per admission card)

**Roll No.** ______________________

(In words)

**Test Booklet No.**

**D – 2605**

**PAPER – II**

# TAMIL

**Time : 1¼ hours]** **[Maximum Marks : 100**

Number of Pages in this Booklet : **16** Number of Questions in this Booklet : **50**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of fifty multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the question booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the Serial No. of the booklet should be entered in the Answer-sheets and the Serial No. of Answer Sheet should be entered on this Booklet.
4. Each item has four alternative responses marked (A), (B), (C) and (D). You have to darken the oval as indicated below on the correct response against each item.

   **Example :** (A) (B) ⬤ (D)

   where (C) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the Answer Sheet given **inside the Paper I booklet only**. If you mark at any place other than in the ovals in the Answer Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your name or put any mark on any part of the test booklet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, you will render yourself liable to disqualification.
9. You have to return the test question booklet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There is NO negative marking.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. पहले पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए।
2. इस प्रश्न-पत्र में पचास बहुविकल्पीय प्रश्न हैं।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी। पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए उसके कवर पेज पर लगी कागज की सील को फाड़ लें। खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं। दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें। इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे। उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा।**
   (iii) इस जाँच के बाद प्रश्न-पुस्तिका की क्रम संख्या उत्तर-पत्रक पर अंकित करें और उत्तर-पत्रक की क्रम संख्या इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (A), (B), (C) तथा (D) दिये गये हैं। आपको सही उत्तर के दीर्घवृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है।

   **उदाहरण :** (A) (B) ⬤ (D)

   जबकि (C) सही उत्तर है।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पत्र I के अन्दर दिये गये** उत्तर-पत्रक पर ही अंकित करने हैं। यदि आप उत्तर पत्रक पर दिये गये दीर्घवृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिन्हांकित करते है, तो उसका मूल्यांकन नहीं होगा।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें।
8. यदि आप उत्तर-पुस्तिका पर अपना नाम या ऐसा कोई भी निशान जिससे आपकी पहचान हो सके, किसी भी भाग पर दर्शाते या अंकित करते हैं तो परीक्षा के लिये अयोग्य घोषित कर दिये जायेंगे।
9. आपको परीक्षा समाप्त होने पर उत्तर-पुस्तिका निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पैन का ही इस्तेमाल करें।**
11. **किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है।**
12. **गलत उत्तर के लिए अंक नहीं काटे जायेंगे।**

## TAMIL

## PAPER – II

**Note:** **This paper contains fifty (50) multiple- choice questions, each question carrying two (2) marks. Attempt all the questions.**

குறிப்பு : இந்த வினாத்தாளில் ஐம்பது (50) விடை தெரி வினாக்கள் உள்ளன. ஒவ்வொரு வினாவும் இரண்டு (2) மதிப்பெண் கொண்டது. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. ஆற்றுப்படை இலக்கியங்களின் எண்ணிக்கை.
   (A) 5 (B) 6 (C) 4 (D) 3

2. புனிதவதியார் என்றழைக்கப்பட்டவர்.
   (A) திலகவதியார் (B) காரைக்காலம்மையார்
   (C) நாச்சியார் (D) மங்கையர்க்கரசியார்

3. ஓரின மன்னர்கள் பற்றிய சங்க இலக்கியம்.
   (A) புறநானூறு (B) பரிபாடல்
   (C) பதிற்றுப்பத்து (D) பத்துப்பாட்டு

4. கபிலர் இயற்றியது.
   (A) இனியவை நாற்பது (B) களவழி நாற்பது
   (C) கார் நாற்பது (D) இன்னா நாற்பது

5. 'நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்' என்று கூறியவர்
   (A) திருத்தக்க தேவர் (B) இளங்கோ
   (C) கம்பர் (D) சேக்கிழார்

6. 'அருள்மொழித்தேவர் ' என்னும் இயற்பெயரினர்
   (A) சேக்கிழார் (B) சாத்தனார்
   (C) கம்பர் (D) திருத்தக்க தேவர்

7. விருத்தப்பாக்களால் ஆன காப்பியம்.

(A) சிலம்பு (B) மேகலை

(C) சிந்தாமணி (D) வளையாபதி

8. 'கவிராட்சதன் ' எனப்பட்டவர்.

(A) புகழேந்தி (B) ஔவையார்

(C) காளமேகம் (D) ஒட்டக்கூத்தர்

9. வச்சணந்திமாலை என்பது.

(A) சிற்றிலக்கியம் (B) சித்திரகவி

(C) வெண்பாப் பாட்டியல் (D) சமயநூல்

10. வீரசைவம் சார்ந்தவர்

(A) இராமலிங்க அடிகள் (B) குமரகுருபரர்

(C) தாயுமானவர் (D) அருணகிரிநாதர்

11. தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை

(A) மறைமலையடிகள்

(B) ரா.பி.சேதுப்பிள்ளை

(C) பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை

(D) பேரசிரியர் சுந்தரம்பிள்ளை

12. ஆய்வேட்டின் அடிப்படையில் முதன்முதலில் முனைவர் பட்டம் பெற்றவர்.

(A) அ. சிதம்பநாதன் செட்டியார்

(B) டி. கே. சிதம்பரநாத முதலியார்

(C) பம்மல் சம்பந்த முதலியார்

(D) டாக்டர் வா. செ. குழந்தைசாமி

13. தமிழ்ப் பேரகராதியின் பதிப்பாசிரியர்.

(A) பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை

(B) வீரமாமுனிவர்

(C) ஜி. யூ. போப்

(D) தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

14. ' இராசராசன் ' விருதினைப் பெற்றவர்

(A) மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

(B) சுத்தானந்த பாரதியார்.

(C) பாரதிதாசன்

(D) கவிமணி

15. தமிழில் வெளிவந்த முதல் இதழ்

(A) சுதேசமித்திரன்

(B) குயில்

(C) தினமணி

(D) தமிழ் மேகசீன்

16. கப்பல் கட்டும் தொழில் நடைபெற்ற அரசர் காலம்

(A) சேரர்

(B) பல்லவர்

(C) சோழர்

(D) பாண்டியர்

17. 'மொழி முதற்காரணமாம்' அணுத்திரள் ஒலி என்பது

(A) எழுத்து

(B) சொல்

(C) மாற்றொலி

(D) உருபன்

18. 'முட்டாச்சிறப்பின் பட்டினம் '

(A) பூம்புகார்

(B) தூத்துக்குடி

(C) உறையூர்

(D) காயல்பட்டினம்

19. போர்ச் செய்திகளைத் தரும் நூல்

(A) கார் நாற்பது (B) களவழி நாற்பது

(C) இன்னா நாற்பது (D) இனியவை நாற்பது

20. யாண்டு பலவாயினும் நரையின்றி வாழ்ந்தவர்

(A) ஔவையார் (B) முடத்தாமக் கண்ணியார்

(C) பிசிராந்தையார் (D) காரைக்காலம்மையார்

21. உறுதிக்கூற்று : சிலப்பதிகாரம் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எனப்படும்.

காரணம் : சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் உரை எழுதியுள்ளார்.

(A) (உ), (கா) இரண்டும் சரி (B) (உ), சரி, (கா) சரியன்று

(C) (உ), (கா) இரண்டும் சரியல்ல (D) (உ), சரியன்று, (கா) சரி

22. உறுதிக்கூற்று : திவாகரம், 'பூரண நிகண்டு' எனப்படும்

காரணம் : நிகண்டுகளுக்குரிய முப்பெரும் தொகுதிகள் திவாகரத்தில் இடம் பெற்றுள்ளன.

(A) (உ), (கா) இரண்டும் சரி (B) (உ), சரி, (கா) தவறு

(C) (உ), தவறு, (கா) சரி (D) (உ), (கா) இரண்டும் சரியல்ல

23. உறுதிக்கூற்று : வேத்தியல் என்பது பண்டைய நாடக வகைகளுள் ஒன்று.

காரணம் : அரசகுடும்பத்தினர் பார்ப்பதற்காக நடத்தப்பட்டது.

(A) (உ), (கா) இரண்டும் தவறு (B) (உ), சரி, (கா) தவறு

(C) (உ), தவறு, (கா) சரி (D) (உ), (கா) இரண்டும் சரி

24. உறுதிக்கூற்று : 'வாடாமலர்' என்பதில் உள்ள 'வாடா' என்பது ஈறுகெட்ட எதிர் மறைப்பெயரெச்சம் ஆகும்.

காரணம் : இறுதி எழுத்து ஒழிந்தது ; உடன்பாட்டுப் பொருளில் வருவது ; பெயரை அவாவி நிற்பது.

(A) (உ), (கா) இரண்டும் சரி
(B) (உ), (கா) இரண்டும் தவறு
(C) (உ), சரி, (கா) தவறு
(D) (உ), தவறு, (கா) சரி.

25. உறுதிக்கூற்று : பாரதி தன் படைப்பொன்றுக்குப் 'பாஞ்சாலிசபதம்', எனப் பெயரிட்டார்.

காரணம் : இது திரௌபதியின் சபதத்தை மையமாகக் கொண்டது

(A) (உ), (கா) இரண்டும் சரி
(B) (உ), (கா) இரண்டும் சரியல்ல
(C) (உ), சரி, (கா) சரியன்று
(D) (உ), சரியன்று, (கா) சரி

26. உறுதிக்கூற்று : தமிழ், உயர்தனிச்செம்மொழி என்னும் தகுதி சான்றது.

காரணம் : இந்திய அரசு தமிழுக்குச் செம்மொழித் தகுதியை வழங்கியுள்ளது.

(A) (உ), (கா) இரண்டும் சரி
(B) (உ), (கா) இரண்டும் சரியல்ல
(C) (உ), சரி, (கா) சரியன்று
(D) (உ), சரியன்று, (கா) சரி

27. உறுதிக்கூற்று : சிவப்பிரகாசர் தன் நூலொன்றுக்கு 'நீரோட்டக யமக அந்தாதி' எனப் பெயரிட்டார்.

காரணம் : இது இதழுகல் யமக அந்தாதி

(A) (உ), (கா) இரண்டும் தவறு
(B) (உ), தவறு, (கா) சரி
(C) (உ), சரி, (கா) தவறு
(D) (உ), (கா) இரண்டும் சரி

28. உறுதிக்கூற்று : ஔவையார் இயற்றிய நீதிநூல் ஒன்றிற்கு ஆத்திச்சூடி என்று பெயர்.

காரணம் : ஆத்திமாலையைச் சூடியபடி அவர் அதனைப் பாடினார்.

(A) (உ), (கா) இரண்டும் சரி (B) (உ), (கா) இரண்டும் சரியல்ல

(C) (உ), தவறு, (கா) சரி (D) (உ), சரி, (கா) தவறு

29. உறுதிக்கூற்று : நொண்டி நாடகம் 'ஒற்றைக்கால் நாடகம்' எனவும் வழங்கப்படும்

காரணம் : தீயவழிகளில் நடந்த ஒருவர் துன்புற்றுக் காலொன்று இழந்து வாடு வதாகப் பாவித்துப் பாடப்படுவது.

(A) (உ), (கா) இரண்டும் தவறு (B) (உ), சரி, (கா) தவறு

(C) (உ), (கா) இரண்டும் சரி (D) (உ), தவறு, (கா) சரி

30. தொல்காப்பிய எழுத்ததிகார வரிசை :

(A) நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல், புணரியல்

(B) பிறப்பியல், நூன்மரபு, மொழிமரபு, புணரியல்

(C) பிறப்பியல், புணரியல், மொழிமரபு, நூன்மரபு

(D) நூன்மரபு, பிறப்பியல், புணரியல், மொழிமரபு

31. இடமலைவின் வரிசை:

(A) ஆறு, மலை, நாடு (B) ஆறு, நாடு, மலை

(C) நாடு, மலை, ஆறு (D) மலை, நாடு, ஆறு

32. முதலாழ்வார்களின் வரிசை :

(A) பேயாழ்வார், பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார்

(B) பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்

(C) பொய்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார்

(D) பூதத்தாழ்வார், பேயாழ்வார், பொய்கையாழ்வார்

33. மொழியியல் பிரிவுகள்

(A) உருபனியல், தொடரியல், உருபொலியனியல், ஒலியனியல்

(B) உருபனியல், ஒலியனியல், உருபொலியனியல், தொடரியல்

(C) ஒலியனியல், உருபனியல், உருபொலியனியல், தொடரியல்

(D) ஒலியனியல், தொடரியல், உருபொலியனியல், உருபனியல்

34. தன்மையணியின் வகை :

(A) சாதி, தொழில், குணம், பொருள்

(B) பொருள், தொழில், சாதி, குணம்

(C) பொருள், குணம், சாதி, தொழில்

(D) தொழில், சாதி, குணம், பொருள்

35. தொல்காப்பியரின் நிலத் தெய்வ வரிசை :

(A) மாயோன், வேந்தன், சேயோன், வருணன்

(B) வருணன், வேந்தன், மாயோன், சேயோன்

(C) மாயோன், சேயோன், வேந்தன், வருணன்

(D) மாயோன், வருணன், வேந்தன், சேயோன்

36. சைவசித்தாந்த சாத்திரத்தை முன்நிறுத்தும் வெண்பாவில் காணலாகும் வரிசை :

(A) உந்தி, போதம், சித்தியார், களிறு

(B) உந்தி, களிறு, போதம், சித்தியார்

(C) களிறு, போதம், உந்தி, சித்தியார்

(D) சித்தியார், களிறு, உந்தி, போதம்

37. ஆற்றுப்படை குறித்த தொல்காப்பியர் நூற்பா :

(A) பாணர், விறலி, பொருநர், கூத்தர்

(B) பாணர், பொருநர், கூத்தர், விறலி

(C) விறலி, கூத்தர், பாணர், பொருநர்

(D) கூத்தர், பாணர், பொருநர், விறலி

38. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | ஞானசம்பந்தர் | (i) | வன்தொண்டர் |
| (b) | திருநாவுக்கரசர் | (ii) | திருவாதவூரர் |
| (c) | சுந்தரர் | (iii) | தாண்டக வேந்தர் |
| (d) | மாணிக்கவாசகர் | (iv) | திராவிடசிசு |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (A) | (iv) | (iii) | (i) | (ii) |
| (B) | (iii) | (iv) | (i) | (ii) |
| (C) | (iv) | (iii) | (ii) | (i) |
| (D) | (ii) | (iv) | (iii) | (i) |

39. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | பெரும்பாணாற்றுப்படை | (i) | நக்கீரர் |
| (b) | பொருநராற்றுப்படை | (ii) | நத்தத்தனார் |
| (c) | திருமுருகாற்றுப்படை | (iii) | முடத்தாமக்கண்ணியார் |
| (d) | சிறுபாணாற்றுப்படை | (iv) | உருத்திரங்கண்ணனார் |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (A) | (iv) | (ii) | (i) | (iii) |
| (B) | (i) | (iii) | (iv) | (ii) |
| (C) | (iv) | (iii) | (i) | (ii) |
| (D) | (iii) | (iv) | (i) | (ii) |

40. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | அகவற்பா | (i) | செப்பலோசை |
| (b) | கலிப்பா | (ii) | தூங்கலோசை |
| (c) | வஞ்சிப்பா | (iii) | துள்ளல் ஓசை |
| (d) | வெண்பா | (iv) | அகவலோசை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (iv) | (ii) | (iii) | (i) |
| (B) | (iv) | (i) | (ii) | (iii) |
| (C) | (iv) | (iii) | (i) | (ii) |
| (D) | (iv) | (iii) | (ii) | (i) |

41. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | வீரசோழியம் | (i) | வீரமாமுனிவர் |
| (b) | இலக்கண விளக்கம் | (ii) | சாமிகவிராசர் |
| (c) | தொன்னூல் விளக்கம் | (iii) | புத்தமித்திரர் |
| (d) | சுவாமிநாதம் | (iv) | வைத்தியநாத தேசிகர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (iii) | (iv) | (i) | (ii) |
| (B) | (iii) | (i) | (iv) | (ii) |
| (C) | (iii) | (ii) | (i) | (iv) |
| (D) | (iii) | (iv) | (ii) | (i) |

42. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | The Pilgrims Progress | (i) | மனோன் மணீயம் |
| (b) | The Light of Asia | (ii) | விரும்பிய வண்ணமே |
| (c) | The Secret way | (iii) | ஆசிய ஜோதி |
| (d) | As you like it | (iv) | இரட்சணிய யாத்திரிகம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (iv) | (i) | (iii) | (ii) |
| (B) | (iv) | (iii) | (i) | (ii) |
| (C) | (iv) | (iii) | (ii) | (i) |
| (D) | (iv) | (ii) | (i) | (iii) |

43. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | திவாகரம் | (i) | இலக்கணம் |
| (b) | கரித்துண்டு | (ii) | காப்பியம் |
| (c) | அவிநயம் | (iii) | நிகண்டு |
| (d) | நீலகேசி | (iv) | நாவல் |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (A) | (iii) | (i) | (ii) | (iv) |
| (B) | (iii) | (ii) | (i) | (iv) |
| (C) | (iii) | (iv) | (i) | (ii) |
| (D) | (iii) | (ii) | (iv) | (i) |

44. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | குறுந்தொகை | (i) | உப்பூரிகுடிகிழார் |
| (b) | நற்றிணை | (ii) | கூடலூர்கிழார் |
| (c) | அகநானூறு | (iii) | பன்னாடு தந்த பாண்டியன் |
| (d) | ஐங்குறுநூறு | (iv) | பூரிக்கோ |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (A) | (iv) | (i) | (iii) | (ii) |
| (B) | (iv) | (ii) | (iii) | (i) |
| (C) | (iv) | (i) | (ii) | (iii) |
| (D) | (iv) | (iii) | (i) | (ii) |

பின்வரும் பகுதியைப் படித்துப்பார்த்துத் தொடர்ந்து இடம்பெற்றுள்ள வினாக்களுக்கு ஏற்ற விடையைச் சுட்டுக.

பிள்ளைத் தமிழ்

சாதகத்தை முதலாக வையாது பிள்ளைக்கவியை முதலாகக் கொண்டு எண்ணுவதும் உண்டு. இதனைப் பிள்ளைப்பாட்டு எனவும் பிள்ளைத்தமிழ் எனவும் வழங்குவர்.

குழவி மருங்கினும் கிழவதாகும் என்ற தொல்காப்பியப் புறத்திணையியல் நூற்பாவே இதன் அடிப்படை என்பர்.

கண்ணனைக் குழந்தையாக எண்ணிப் பலவாறாகப் பாடிய பெரியாழ்வாரும், இராமனைக் குழந்தையாக எண்ணிப் பாடிய குலசேகராழ்வாரும் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் முன்னோடிகள். பெரியாழ்வார் திருமொழியில் தாலப்பருவம் அம்புலிப் பருவம், செங்கீரை, சப்பாணி, தளர்நடை, அச்சோப் பருவம், புறம்புல்கள், பூச்சிகாட்டல், முலையுண்ணல், காதுகுத்தல், நீராட்டல், குழல்வாரக் காக்கையை வாவெனல், கோல் கொண்டு வா எனல், பூச்சூட்டல், காப்பிடல் முதலிய பிள்ளைத்தமிழ்ச் சாயற்பகுதிகள் உள. குலசேகராழ்வார் இராமனின் தாலப்பருவமும் கண்ணனின் வருகைப் பருவமும் பாடினார். நாச்சியார் திருமொழியில் சிற்றில் சிதைத்தல் திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழியில் சப்பாணிப் பருவம், வெண்ணையை உண்ட மாட்சி ஆகியன கூறப்பட்டுள்ளன.

கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் ஒட்டக்கூத்தர் இயற்றிய குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் தான் முதலில் தோன்றிய முழுமையான - தனித்த பிள்ளைத்தமிழ் நூல். இதுவரை 150- க்கும் மேற்பட்ட பிள்ளைத்தமிழ் நூல்கள் தோன்றியுள்ளன. பாட்டியல் நூல்களில் பிள்ளைத்தமிழ் இலக்கணம் பற்றிய நூற்பாக்கள் 42 உள.

ஆண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பருவங்கள் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்னும் பத்து.

பெண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பருவங்கள் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, கழங்கு, அம்மானை ஊசல் ஆகிய பத்து.

3 ஆம் திங்களில் தொடங்கி 21 ஆம் திங்கள் வரை பருவத்துக்கு 2 திங்களாகக் கொண்டு பிள்ளைத்தமிழ் பாடப்பெறும் என்பர். இக்காலவரையறை மாறுபடுதலும் உண்டு. பொதுவாக ஒரு பருவத்துக்குப் பத்துப்பாடல்கள் எனப் பத்துப் பருவத்துக்கும் சேர்ந்து நூறு பாடல்கள் பிள்ளைத்தமிழில் இடம் பெறும்.

பிள்ளைப்பாட்டே தெள்ளிதின் கிளப்பின்
மூன்றுமுதலா மூவேழ் அளவும்
ஆன்ற திங்களின் அறைகுவர்நிலையே

- பன்னிருபாட்டியல்

பத்து உறுப்பாய் ஒவ்வொன்று விருத்தம்
பப்பத்தாகப் பாடல் என்ப

- தொன்னூல் விளக்கம்.

சிலர் கடைசி மூன்று பருவங்கட்கும் முறையே 3.5.7 ஆம் ஆண்டுகள் உரியவை என்பர். பிள்ளைத்தமிழ்ப் பாடல் எண்ணிக்கை தேவர்க்கு நூறும், அந்தணர்கருத் தொண்ணூறும், அரசருக்கு எண்பதும், வைசியருக்கு எழுபதும், வேளாளருக்கு அறுபதும், ஆம் என்னும் பிரபந்த மரபியல் (3).

பிள்ளைத் தமிழுக்குரிய யாப்புவகை
பெரும்பாலும் விருத்தமே. பிறவும் வரலாம்.
அகவல் விருத்தமும் கட்டளை ஒலியும்
கலியின் விருத்தமும் கவின்பெறு பாவே

- பன்னிரு பாட்டியல்

பிறவா யாக்கைப் பெரியோனாதலின் சிவனுக்குப் பிள்ளைத்தமிழ் பாடுவதில்லை. விநாயகர், முருகன், திருமால், உமை, அனுமான் எனத் தெய்வங்களின் மேல் பாடப்பட் டவை மிகுந்துள்ளன.

அம்பலவாணர் பிள்ளைத்தமிழ் என்பது ஆசிரியர் மேலது. சிவந்தெழுந்த பல்லவராயன் பிள்ளைத்தமிழ் புலவர் பற்றியது. இராசாசி பிள்ளைத்தமிழ் தலைவர் மேலது.

பிள்ளைத்தமிழ் நூல்களில் சிறந்தவை:

குமரகுருபரரின் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக் குமாரசாமி பிள்ளைத்தமிழ் ஆகியவை. காலம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டு.

45. ஆண்பாற் பிள்ளைத் தமிழில் இடம் பெறுபவை

(1) அம்புலி (2) சிறுதேர் (3) சப்பாணி (4) கழங்கு

கீழே தரப்பட்டுள்ள விடைதெரி குறிப்பிலிருந்து விடையைக் கண்டு பிடிக்கவும்.

(A) (1)ம், (2)ம் சரி (B) (1)ம், (2)ம், (3)ம் சரி

(C) (1)ம், (3)ம், (4)ம் சரி (D) (2)ம், (3)ம், (4)ம் சரி

46. பெரியாழ்வார் திருமொழியில் இடம்பெறும் பகுதிகள்

(1) தாலப்பருவம் (2) காதுகுத்தல் (3) ஊசல் (4) பூச் சூட்டல்

கீழே தரப்பட்டுள்ள விடைதெரி குறிப்பிலிருந்து விடையைக் கண்டுபிடிக்கவும்.

(A) (1)ம், (4)ம் சரி (B) (1)ம், (2)ம், (4)ம் சரி

(C) (1)ம், (2)ம், (3)ம் சரி (D) (1)ம், (3)ம், சரி

47. உறுதிக்கூற்று : சிவனுக்குப் பிள்ளைத்தமிழ் பாடுவதில்லை.

காரணம் : அவன் பிறவா யாக்கைப் பெரியவன்

(A) (உ) (கா) இரண்டும் சரியல்ல

(B) (உ) சரி, (கா) சரியன்று

(C) (உ) சரியன்று, (கா) சரி

(D) (உ) (கா) இரண்டும் சரி

48. பிள்ளைத்தமிழின் முதன் மூன்று பருவங்கள்

(A) காப்பு, தால், செங்கீரை

(B) தால், காப்பு, செங்கீரை

(C) காப்பு, செங்கீரை, தால்

(D) தால், செங்கீரை, காப்பு

49. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | கண்ணன் | (i) | ஒட்டக்கூத்தர் |
| (b) | குலோத்துங்கன் | (ii) | குமரகுருபரர் |
| (c) | இராமன் | (iii) | பெரியாழ்வார் |
| (d) | மீனாட்சியம்மை | (iv) | குலசேகரர் |

சரியான விடையைத் தெரிவு செய்க

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (A) | (iv) | (iii) | (ii) | (i) |
| (B) | (iii) | (i) | (iv) | (ii) |
| (C) | (iii) | (ii) | (i) | (iv) |
| (D) | (iii) | (ii) | (iv) | (i) |

50. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | நாச்சியார் திருமொழி | (i) | வெண்ணெய் உண்ட மாட்சி |
| (b) | பெரியாழ்வார் | (ii) | வருகைப்பருவம் |
| (c) | திருமங்கையாழ்வார் | (iii) | சிற்றில்சிதைத்தல் |
| (d) | குலசேகராழ்வார் | (iv) | அம்புலிப்பருவம் |

சரியான விடையைத் தெரிவு செய்க :

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (A) | (ii) | (iv) | (i) | (iii) |
| (B) | (ii) | (iii) | (iv) | (i) |
| (C) | (iii) | (iv) | (i) | (ii) |
| (D) | (iii) | (ii) | (i) | (iv) |

- o O o -

**Space For Rough Work**